இதழ்-97

01.07.2026

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

**ஆசிரியர்**
ச.சந்தோஷன்

**இணை ஆசிரியர்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**செய்தியியலாளர்**
ச.மதுஷா

**வடிவமைப்பாளர்**
ர.அபிரா
வ. குணநீதன்

**திறனாய்வாளர்**
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 Gen-Z தவிர்க்க முடியாத எதிர்காலமாகும்! நிராகரிப்புக்களை தவிர்த்து வழிப்படுத்துவதே அவசியம்!

06 படித்தவர் என்பவர் யார்?

09 கழிக்கப்பட்ட டயர்களால் சத்தத்தை குறைக்கும் சுவர் அமைப்பு

10 அளவுகோலில் இருக்கும் அந்தச் சிறிய இடைவெளி: நாம் அறியாத அறிவியல்

12 இலங்கையில் ஆரியமும் பௌத்தமும்

18 யாழில் இருந்து இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு தெரிவான வீராங்கனை

20 கராத்தே போட்டியில் மக-ாஜனக் கல்லூரி மாணவி தங்கம் வென்றார்

21 ஈழத்தமிழர்கள்

26 போதையின் பாதையில் பேதை நெஞ்சங்கள்

37 உலககிண்ண கால்பந்து - 2026 வடஅமெரிக்காவில் உலகத் திருவிழா

ஆசிரியர் பதிவு

# Gen-Z
# தவிர்க்க முடியாத எதிர்காலமாகும்! நிராகரிப்புக்களை தவிர்த்து வழிப்படுத்துவதே அவசியம்!

2000களுக்கு பிறந்த Gen-Z (ஜென்-,சட்) தலைமுறையின் ஊடாட்டமும் ஆதிக்கமும் அரசியல் சமூக பொருளாதார பரப்பில் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் "தி எகனோமிஸ்ட்" (The Economist) ஆங்கில இதழ், முதன்மையான அரசியல் பொருளாதார சமுக கொள்கையான சோசலிசத்திற்கு ஜென்-இசட் அடைமொழியிட்டு (The rise of Gen-Z socialism) கட்டுரை எழுதியுள்ளது. இடதுசாரிகளிடையே ஒரு புதிய மாற்றம் உருவாகி வருகிறது. "ஒரு புதிய தலைமுறை சோசலிஸ்டுகள், விலைக் கட்டுப்பாடுகள், பெரும் செல்வ வரிகள் மற்றும் தொடர்ச்சியான தேசியமயமாக்கல்கள் மூலம் பொருளாதாரத்தை மாற்றியமைக்க விரும்புகிறார்கள். இதை ஜென்-இசட் சோசலிசம் என்று அழைப்போம்" என்ற சாரம்சத்தை விளக்குவதாக கட்டுரை அமைகின்றது.



இக்கட்டுரையை எழுதியுள்ள ஆசிரியர், “ஜென்-இசட் சோசலிசம்“ என்பது, இதை ஆதரிப்பவர்கள் அனைவரும் இளைஞர்கள் என்பதாலோ, அல்லது இளைஞர்கள் இடதுசாரிச் சிந்தனை கொள்வது புதிது என்பதாலோ இத்தகைய பெயரிடலை வழங்கவில்லை என விளக்குகின்றார். மாறாக, இது டிக்டாக் யுகத்திற்கென (சமுக வலைத்தள) உருவாக்கப்பட்ட ஒருவகை இடதுசாரித்துவம் என்பதாலும், இன்றைய இளம் புரட்சியாளர்கள் இதைத்தான் ஆதரிக்கிறார்கள் என்பதாலும் அத்தகைய புதிய பெயரிடலை பரிந்துரைப்பதாக குறிப்பிடுகின்றார்.

விரும்பியோ விரும்பாமலோ அடையாளம் பிரபல்யமற்ற வகையில் ஜென்-,சட் ஊடாட்டத்தின் ஆரம்ப படிமங்கள் இலங்கையிலேயே அறியப்படுகின்றது. 2022ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற அரகலயவின இயல்புகள் ஜென்-இசட் அரசியல் ஊடாட்ட தன்மையே பிரதிபலிக்கின்றது. எனினும் ஜென்-இசட் பற்றிய உரையாடலினை 2024ஆம் ஆண்டு பங்களாதேஷ் ஜூலை கிளர்ச்சி, 2025ஆம் ஆண்டு நேபாள கிளர்ச்சி என சமகாலப்பகுதியில் ஆட்சி மாற்றத்தை மையப்படுத்தி தென்கிழக்காசியாவில் இந்தோனேசியா, காசா போருக்கு எதிரான அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இளையோர்களின் எதிர்ப்புக்கள் ஜென்-இசட் உரையாடலை வேகப்படுத்தியுள்ளது. இது தற்போது இந்தியாவில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (Cockroach Janata party) என நையாண்டியாக உருவாக்கப்பட்ட சமூக வலைத்தள கணக்கை சமூக இயக்கமாக மாற்றி வருகின்றது. இதன் உருவாக்கத்தின் பின்னணியில் 2026-மே இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பொன்றில் வேலையில்லாத இளைஞர்களை கரப்பான் பூச்சியுடன் ஒப்பிட்டுக் கூறிய சம்பவமே காணப்படுகின்றது.

தமிழக தேர்தல் முடிவுகளிலும் ஜென்-இசட் பிரிவினரின் தாக்கம் காரசாரமாக தேர்தல் பரப்புரை காலம் தொடக்கம் தேர்தல் முடிவுகளின் பின்னரும் இன்றுவரை விவாதிக்கப்படுகின்றது. தேர்தல் பரப்புரைகளில் ஜென்-இசட் பிரிவினரினை தற்குறிகளாய் பிரச்சாரப்படுத்தியவர்களே, தேர்தல் முடிவுகளின் பின் ஜென்-இசட் பிரிவினரினை தீர்மானமிகு சக்திகளாய் Meet-Upகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றனர்.

இந்நிலை மாற்றம் ஜென்-இசட் தவிர்க்க முடியாத எதிர்காலம் என்ற செய்தியையே வழங்குகின்றது. தாத்தாக்களின் தலைமுறையிலிருந்து வேறுபட்ட சிந்தனைகளையே அப்பாக்களின்

தலைமுறை கொண்டிருந்தது. அப்பாக்களின் தலைமுறையிலிருந்த சிந்தனை எமது தலைமுறைகளில் வேறுபட்டிருந்தது. எம் தலைமுறை சிந்தனையிலிருந்து வேறுபட்டதாகவே எம் பிள்ளையின் தலைமுறை கொண்டிருக்கும் என்பது எதார்த்தமானதாகும். கடந்த தலைமுறை மாற்றங்களை விட எம் பிள்ளைகளின் மாற்றம் விரைவானதும் பரந்ததுமாகும். இது தொழில்நுட்ப நூற்றாண்டின் தலைமுறை எனும் எதார்த்தத்தை பழைய தலைமுறையினர் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இவ் எதார்த்தம் புரியுமிடத்து ஜென்-இசட் பிரிவின் போக்கு நிராகரிப்பதை கடந்து வழிப்படுத்த வேண்டியதன் அவசியம் அறியப்படும்.

வரலாற்று ஆய்வாளரான யுவால் நோவா ஹராரி எழுதிய “சேப்பியன்ஸ்“ என்ற புத்தகம் மனித பரிமானம் பற்றிய எதார்த்தத்தை கட்டவிழ்க்கிறது. கட்டுக்கதைகளும் புனைவுகளும் கலாசாரமாக சமூக ஒழுங்கை வடிவமைத்த நம்பிக்கையையும் அதுவே கால மாற்றத்தில் இயல்பான உள்ளார்ந்த மோதலால் வடிவம் மாறுவதும் விளக்கப்படுகிறது. இங்கு அத்தகைய உள்ளார்ந்த மோதல் மாற்றமாகவே ஜென்-இசட் போக்கு காணப்படுகின்றது. எனினும் ஜென்-இசட் தொடர்பில் பழைய தலைமுறையினர் முன்வைக்கும் குறைகளை உள்வாங்கிக் கொள்வதும் திருத்திக்கொள்வதும் ஜென்-இசட் சமூகத்தினருக்கும் அவசியமானதாகும். தவறுகையில் மிதமிஞ்சிய வேகம் விபத்துக்களையும் அழிவுகளையுமே உருவாக்கும்.






பட்டங்களை வாங்கி குவித்து வைத்திருப்பாரே, அவரா?

அல்லது சக மனிதனிரிடத்தில் தன் அறிவுக்கூர்மையை கணமும் நிருபித்துக் கொண்டு இருப்பாரே அவரா?

கசடு அறக் கற்றவர் தான் யார்? தக நிற்பவர் தான் யார்?

அனைவரையும் தன் கண்மட்டத்திற்கு கீழே பார்ப்பாரே அவரா? அல்லது அனைவரிடமும் அனுசரித்துப்போவாரே அவரா?

கதை சொல்லி கதை சொல்லி கல்லையும் கருமமாற்ற வைப்பாரே அவரா?
அல்லது சொல்லிப்பயனில்லை என்று சும்மா இருப்பாரே அவரா?

புரட்சிகர கருத்துக்களைச்சொல்லி சமகாலத்தை புதிதாய் புரிய வைப்பாரே அவரா? அல்லது தெரியாதென்று சொல்லத் தெரியாதவராய் கேட்டதெற்கெல்லாம் ஏதோ ஒன்று சொல்லுவாரே அவரா?

சமூகத்தின் சங்கமத்தில் தன்னையே தொலைப்பாரே அவரா? அல்லது
தத்துவமே மொழியென்றாகி
சமூகத்தை விட்டு பத்தடி தள்ளியே பயணிப்பாரே அவரா?

யாராக இருந்தாலும் அநியாயத்தை தட்டிக்கேட்பாரே அவரா? அல்லது அநியாயம் செய்பவரின் அதிகாரத்திற்கு அமைதி காப்பாரே அவரா?

கருவோடு திருவில்லை எனினும் கற்றதினால் பெருமகனாகினாரே அவரா
அல்லது கற்றபின்னும் பிச்சைபுகும் கற்பனைவாதி அவரா?

பொருட்கள் விலையேறும் சந்தையில் தனது விலையையும் ஏற்றிக் கொண்டே போவாரே அவரா? அல்லது மனுசன் எத்தனை திறமைகளைத்தான் ஒளித்து வைத்திருப்பாரோ என வியக்க வைப்பாரே அவரா?

கற்றோர் முன்பும் கலக்கமின்றி தன் கருத்துரைக்கும் சொலன் வல்லார் அவரா?

அல்லது சொல்லத் தெரியாதவற்றிற்கெல்லாம் ‘சொன்னால் விளங்காது’ என்று சொல்லிவிட்டுப் போவாரே அவரா?

கற்றதை வைத்து குடும்பத்துப் பொருள் பெருக்குவாரே அவரா?அல்லது

கற்றதனாலாய பயன் ஒன்றில்லை என புலம்பித் தீர்ப்பாரே அவரா?

வாழும் வரை ‘அவர் ஒரு போக்கு’-
செத்தபிறகு மொத்த ஊரும் திரும்பிப்பார்த்து
மேதவி என்றுமே, அவரா?

யார் படித்தவர்?

இந்தக் கேள்விக்களிற்கெல்லாம் பதில் சொல்லும் அளவிற்கு கற்றவர் யாரும் இருந்தால் சொல்லுங்கள்.

கற்றவர் ஒருவரின் காட்சிப்படிமம் தான் இம்முறை அட்டையிலும் அச்சாகியுள்ளது.

கற்றவர் என்பவர் உண்மையில் யார்?
அவர் எப்படி இருப்பார்? கற்றவர்களை அடையாளங் காண்பதுதான் எப்படி?

கானமயிலும் அழகுதான்
கண்டிருந்த வான் கோழியும் அழகுதான்.
அந்த அழகை பார்க்கக்கூடிய கண்ணுடையோரே
கற்றோர் என்கிறது வள்ளுவம்.

இந்த வாழ்க்கையை நேர்மையாய் மட்டுமே வாழ முடியும் என எமக்கு கற்றுக்கொடுக்கும் அனைவருமே கற்றவர்கள் தான்.

‘படித்தவர் சூதும் வாதும் செய்தால்,
போவார் போவார் ஐயோவென்று போவார்!என்றான் பாரதி ஆவேசமாக

ஒரு நபரை சந்திக் கிறீர்கள். சந்திப்பை முடித்துச் செல்லும் போது

சந்திக்க முதல் இருந்த உங்களிற்கும்
சந்தித்த பின் இருக்கும் உங்களிற்கும் இடையில் ஏதோ ஒரு தெளிவு இருக்குமென்றால்

சந்தித்த அந்த நபர் ஒரு படித்தவர்!



# கழிக்கப்பட்ட டயர்களால் சத்தத்தை குறைக்கும் சுவர் அமைப்பு




செக் குடியரசைச் சேர்ந்த ஒரு நிறுவனம், பயன்படுத்தி முடிக்கப்பட்ட பழைய டயர்களை நெடுஞ்சாலைகள் மற்றும் நகர சாலைகளுக்கான ஒலி தடுப்பு சுவர்களாக (Noise Barriers) மாற்றி வருகிறது.

பழைய டயர்கள் முதலில் ரப்பர் துகள்களாக (Rubber Granulate) மாற்றப்படுகின்றன. பின்னர் அவை பாலிமர்கள் அல்லது ரெசின்களுடன் கலந்து வலுவான ஒலி உறிஞ்சும் பலகைகளாக தயாரிக்கப்படுகின்றன. இந்த பலகைகள் பரபரப்பான சாலைகளின் ஓரங்களில் பொருத்தப்பட்டு வாகனங்களின் சத்தத்தை குறைக்க உதவுகின்றன.

இந்த முயற்சி மூலம் குப்பையாக மண்ணில் புதைக்கப்படும் டயர்களுக்கு புதிய வாழ்க்கை கிடைக்கிறது. உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 100 கோடிக்கும் அதிகமான டயர்கள் கைவிடப்படுகின்றன. ஐரோப்பாவில் மட்டும் பல மில்லியன் டயர்கள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யப்படுகின்றன. ரப்பர் அடிப்படையிலான இந்த ஒலி தடுப்பு சுவர்கள் மழை, வெயில் போன்ற காலநிலை மாற்றங்களை தாங்கக்கூடியவை. மேலும் பல்வேறு நிறங்கள் மற்றும் வடிவமைப்புகளில் உருவாக்கப்படலாம்.

EN 1793 போன்ற சர்வதேச ஒலி சோதனை தரநிலைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தரமான ஒலி தடுப்பு சுவர்கள் சாலை போக்குவரத்து சத்தத்தை கணிசமாகக் குறைக்க முடியும் என்றும், சில அமைப்புகள் சுமார் 30 டெசிபல் வரை சத்தத்தை குறைக்கும் திறன் கொண்டவை என்றும் தெரிவிக்கின்றன. குப்பையாக கருதப்பட்ட ஒரு பொருள், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் புத்திசாலித்தனமான தீர்வாக மாறியுள்ளது!

# அளவுகோலில் இருக்கும் அந்தச் சிறிய இடைவெளி: நாம் அறியாத அறிவியல் ரகசியம்!




நாம் பள்ளிக் பருவத்திலிருந்தே தினசரி பயன்படுத்தும் மிகச் சாதாரணமான ஒரு பொருள் என்றால் அது அளவுகோல் (Ruler / Scale) தான். கோடு வரைவதற்கும், பொருள்களின் நீளத்தை அளவிடுவதற்கும் இதனைப் பயன்படுத்துகிறோம். ஆனால், எப்போதாவது ஒருமுறை அதன் ஆரம்பப் பகுதியை உற்று நோக்கியிருக்கிறீர்களா? அளவுகோலின் தொடக்க விளிம்பிற்கும், பூஜ்ஜியம் (0) என்ற எண் அச்சிடப்பட்டிருக்கும் கோட்டிற்கும் இடையே ஒரு சிறிய இடைவெளி இருக்கும். பலரும் இதனை ஒரு தயாரிப்புப் பிழை அல்லது சாதாரண வடிவமைப்பு என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சிறிய இடைவெளிக்கு பின்னால் மிக முக்கியமான பொறியியல் மற்றும் அறிவியல் காரணங்கள் ஒளிந்திருக்கின்றன.

## பாதுகாப்புப் பகுதி (Buffer Zone)

பிளாஸ்டிக் அல்லது மரத்தினால் ஆன அளவுகோல்கள் நமது பைகளில் இருக்கும்போதும், பயன்படுத்தும்போதும் அதன் முனைப்பகுதிகள் அடிக்கடி தரையில் முட்டலாம் அல்லது தேயலாம். ஒருவேளை பூஜ்ஜியம் என்ற குறியீடு அளவுகோலின் விளிம்பிலேயே மிகச் சரியாகத் தொடங்கினால், விளிம்பில் ஏற்படும் சிறிய சிதைவு கூட ஒட்டுமொத்த அளவீட்டின் துல்லியத்தையும் கெடுத்துவிடும். எனவேதான், இந்த இடைவெளி ஒரு பாதுகாப்புப் பகுதியாகச் செயல்பட்டு, விளிம்பு சேதமடைந்தாலும் அளவீடு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

தெளிவான வாசிப்பு (Readability)

பூஜ்ஜியக் கோடு விளிம்பிற்கு மிக அருகில் அச்சிடப்பட்டால், எண்களைப் பார்ப்பதிலும் துல்லியமாகக் கணக்கிடுவதிலும் சிரமம் ஏற்படும். இந்தச் சிறிய இடைவெளி, ஆரம்பக் குறியீடுகளை எவ்விதக் குழப்பமும் இன்றி தெளிவாகப் பார்க்க உதவுகிறது. பள்ளி மாணவர்கள் மற்றும் அலுவலகப் பயன்பாட்டிற்கு வரும் அளவுகோல்கள் நீண்ட காலம் உழைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த வடிவமைப்பு வேண்டுமென்றே சேர்க்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப அளவுகோல்களின் வேறுபாடு

அதேநேரம், சில உலோக அளவுகோல்கள் (Steel Rules) மற்றும் பொறியியல் பயன்பாட்டுக் கருவிகளில் பூஜ்ஜியம் நேரடியாக விளிம்பிலேயே தொடங்கக் காணலாம். அவை நேரடி மேற்பரப்பு அளவீடுகளுக்காகவும், தேய்மானம் அடையாத வலுவான உலோகங்களாலும் செய்யப்படுபவை. ஆனால், அன்றாடப் பயன்பாட்டு அளவுகோல்களில் இந்த இடைவெளி இன்றியமையாதது என்று அமெரிக்காவின் தேசிய தரநிலைகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (NIST) போன்ற அளவீட்டு கல்வி அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

துல்லியமாக அளவிடுவது எப்படி?

இந்த வடிவமைப்பின் பின்னணியை உணர்ந்து, நாம் அளவிடும் போது சில எளிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். எப்போதும் ஒரு பொருளை அளவுகோலின் விளிம்போடு பொருத்தக் கூடாது பூஜ்ஜியம் (0) கோட்டுடன் சீராகப் பொருத்தித்தான் அளவிடத் தொடங்க வேண்டும். ஒருவேளை அளவுகோலின் ஆரம்பப் பகுதி உடைந்திருந்தால், பொருளை 1 சென்டிமீட்டர் (1 cm) குறியீட்டுடன் பொருத்தி அளந்துவிட்டு, இறுதி மதிப்பில் இருந்து அந்த 1 சென்டிமீட்டரைக் கழித்துக் கொள்ளலாம். இது நமக்கு மிகத் துல்லியமான அளவைத் தரும்.

நாம் சாதாரணமாகக் கடந்து செல்லும் ஒரு சிறிய அளவுகோலுக்குப் பின்னால் கூட, இவ்வளவு நுட்பமான துல்லிய அறிவியலும், நீண்ட ஆயுளுக்கான வடிவமைப்புப் தத்துவமும் மறைந்திருப்பது உண்மையிலேயே வியப்பிற்குரிய ஒன்றுதான்!



# இலங்கையில் ஆரியமும் பௌத்தமும்

அதுஜன்
வரலாற்றுத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் முழுக்க முழுக்க செல்வாக்குச் செலுத்தியவர்கள் பெரும்பான்மையினமாகக் காணப்பட்ட சிங்களவர்கள் ஆகும். சிங்களவர் என்ற இனத்தின் பிரதான தனித்துவ மதமாக பௌத்த சமயமும் சுதந்திர இலங்கையில் திகழ்ந்தது. மேலும் இலங்கை அரசியல் ஜனநாயக முறையாக்கப்பட்டு அரசியலமைப்புத் திட்டங்களினூடே சுதந்திரத்திற்குப் பின்னர் நகர்த்தப்பட்டது. அந்த அடிப்படையில் முழுச் சுதந்திரம் பெற்றதன் பின் பிரித்தானிய அரசின் தலையீடு முற்றுமுழுதாக இல்லாமல் உருவாக்கப்பட்ட முதல் யாப்பு 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பாகும். (பாசில், 2020)

இவ்வாறு உருவாக்கப்பட்ட இவ்வரசியல் யாப்பானது, சிங்களவர்களையும் அவர்களின் மதமான பௌத்த சமயத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே உருவாக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு யாப்பின் 3ஆம் அத்தியாயம் 7ஆம் சரத்து இலங்கையின் அரசகரும மொழி சிங்களம் எனக் கூறுகிறது.

இதற்கு முன்னர் 1956 இல் சிங்கள மொழி அரசகரும மொழியாக இருந்தாலும் அது பாராளுமன்ற சட்டமாகவே இருந்தது. அத்தோடு இவ்வரசியல் யாப்பின் 2ஆம் அத்தியாயத்தில் பௌத்த மதம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில் "இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு வழங்க வேண்டும் என்பதுடன் அதனைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தல் அரசின் கடமையாகும்" எனக் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் பௌத்த மதம் அரச மதம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. (பாசில், 2020)

இவ்வரசியல் யாப்பு இலங்கையில் ஆரிய வழி வந்த சிங்கள இனம், அதனூடே பிரதிநிதித்துவப்படுத்தி தனித்துவ மதமாக அடையாளப்படுத்தப்படும் பௌத்த மதம், அவற்றின் வழியாக கையளிக்கப்படும் அரசியல் ஆட்சியுரிமை என்ற அடிப்படையில் இலங்கை வரலாற்றின் ஆட்சி திகழ்வதை எடுத்துக்காட்டுகிறது.

மற்றும் பௌத்த மதப் பண்பாடுகள் இலங்கை வரலாற்றில் தனித்துவமாக அடையாளப்படுத்தப்படுவதை இலங்கையின் 1978ஆம் ஆண்டின் 2ஆம் குடியரசு யாப்பினூடாகவும் தெளிவுபடுத்திக் காட்டலாம். 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 4ஆவது அத்தியாயம் பௌத்த மதம் பற்றிக் குறிப்பிடுகின்றது. (யோதிலிங்கம். 2013) இதன்படி இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மை தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும், பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆகவே அரசியல் யாப்புக்கள் இலங்கையின் அரசியல் ஒழுங்கை பெரும்பான்மையினமான சிங்கள இனத்தையும், அவர்களின் பௌத்த மதத்தையும் மையப்படுத்தி இவற்றிற்கு முதன்மையிடம் வழங்கி கட்டமைத்திருப்பது. இலங்கையரசின் வரலாற்று ஆரம்பத்தை மகாநாம தேரர் ஆரிய வருகையையும், பௌத்த தோற்றத்தையும், குறிப்பாக மகாவம்சத்தின் முதல் அத்தியாயம் புத்தரின் இலங்கை வருகையுடன் ஆரம்பிக்கப்படுகிறது. 6ஆம் அத்தியாயம் ஆரிய வருகை மற்றும் புத்த மதத்தின் தோற்றத்திற்கான அறிகுறியை வெளிப்படுத்தியது. அதேபோல சுதந்திரம் பெற்ற பின்னரான புதிய இலங்கையில் அரசியல் யாப்புக்கள் ஆரிய வழிவந்த இனத்தையும், பௌத்த மதத்தையும் முதன்மைப்படுத்தி அவற்றின் ஆதரவுடனான இலங்கை தேசத்தை வடிவமைத்திருப்பது தெளிவாக ஆரியக்கோட்பாட்டின் செல்வாக்குடன் பௌத்தம் நிலை பெற்றிருப்பதைத் தெட்டத்தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

இலங்கையின் வரலாற்றைக் கூறும் முதலாம் தர மூலாதாரமான மகாவம்சத்தின் 37 அத்தியாயங்களும் ஆரியர் வருகையுடன் ஆரம்பித்து பௌத்த மதத் தோற்றத்தைப் பற்றிய விடயங்களை எடுத்துக் கூறுவதுடன் நூலின் முழுப்பகுதியும் சிங்கள மன்னர்களைப் பற்றியும் குறிப்பாக மகாவம்சத்தின் நாயகனான துட்டகைமுனுவைச் சிறப்பித்துக் கூறுவதும் ஆரியத்தோடு ஒருமித்த பௌத்தப் பண்பாடு எழுச்சி பெற்றிருப்பதை நிறுவுகிறது.

குறிப்பாக மகாவம்சத்தின் முதல் அத்தியாயம் புத்தர் வருகையுடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பது இலங்கைத் தீவின் வரலாற்றில் புத்தமதம் இன்றியமையாதது என்பதை நிறுவுகிறது. (சங்கரன், 1962) மற்றும் இலங்கையில் “ஆரியர்” குடியேறிய நிகழ்ச்சியுடன் வரலாறு ஆரம்பித்தது என்ற கருத்து பேராசிரியர் பரணவிதான இலங்கை வரலாறு பற்றி எழுதும் முன்னரே நிலவிய ஒரு கருத்தாகும். எனினும் அக்கருத்துக்கு அதிகாரம் வழங்கும் வகையில் பேராசிரியர் எழுதிய “Aryan Settlements : The Sinhalese” என்ற அத்தியாயம் அமைந்தது. இவற்றைத் தொடர்ந்து வந்த இளம் வரலாற்றாசிரியர்கள் இக்கருத்தை மையப்படுத்தியே இலங்கை வரலாற்றைக் கட்டமைத்து வந்துள்ளனர். (இந்திரபாலா, 2006) இவ்வாறு புராதன காலம் தொடக்கம் தற்காலம் வரை ஆரியக் கோட்பாடு என்ற அடித்தளத்திலிருந்தே பௌத்த மதப் பண்பாடுகள் வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளன. இக்கருத்துநிலை இலங்கை வரலாற்றின் பழம்பெரும் மூலாதாரமான மகாவம்சம் உறுதிப்படுத்துவதோடு இலங்கையின் பல்வேறு வரலாற்றாசிரியர்களும் இக்கருத்தை மையமாக வைத்தே இலங்கை வரலாற்றைக் கட்டமைத்துள்ளனர் என்பதிலிருந்து தெளிவாகின்றது. மற்றும் இந்த ஆரியக் கோட்பாட்டின் செல்வாக்கு உலகரங்கில் குறிப்பாக ஜெர்மனியில் முன்னிறுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் மகாவம்சம் ஆரியர்களைத் தனித்துவமாக வரலாற்றில் நிறுவி ஆரியக் கோட்பாட்டினை இலங்கை வரலாற்றில் தோற்றுவித்து அதனோடு பௌத்த மதப் பண்பாடுகள் இணைக்கப்பட்டு எவ்வாறு ஒரு தனித்துவம் வெளிப்படுத்தப்பட்டதோ. அதேபோல 1933ஆம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவர் ஜெர்மனியைப் பலப்படுத்த ஆரியக் கோட்பாட்டையே எடுத்துக்கொண்டார். இதற்கு ஹிட்லரின் மெயின் காம்பின் “என்னுடைய போர்” என்ற நூல் தக்க சான்றாகும்.

ஏனெனில் இந் நூலில் ஆரியக் கோட்பாட்டில் எவ்வாறு ஆரியர்களும், அவர்கள் வழிவந்த சிங்களவர் பின்பற்றிய பௌத்த மதமும் தனித்துவமாக நிறுவப்படுகின்றதோ அதே அம்சங்களைக் கொண்ட கருத்து நிலை இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ஒரு நாட்டின் பெருமை அதன் மக்களுடைய குலப்பெருமையைப் பற்றியது. அப்படிப் பார்த்தால் ஜெர்மனியர் மட்டுமே கலப்பில்லாதவர்கள் என்றார் ஹிட்லர். இதனால் ஜெர்மனியில் வேற்றினத்தவருக்கு இடமில்லை. ஹிட்லருடைய ஆட்சிக்காலத்தில் அங்கு வாழ்ந்த யூத குல மக்கள் ஜெர்மனியின் தனித்துவம் கருதி நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். (ஆரோக்கியசாமி. 1961) இவ்வம்சங்கள் ஹிட்லரின் நாசிசவாதக் கோட்பாட்டில் ஆரியக் கோட்பாட்டின் செல்வாக்கை எடுத்தியம்புகிறது. இவ்வாறு உலகரங்கில் தனித்துவமான இனம், தனித்துவமான மதம், தனித்துவப் பண்பாடு என்பதை நிறுவ ஆரியக்கோட்பாட்டம்சங்கள் கைக்கொள்ளப்பட்ட விதத்தை அடிக்கோடிட்டுக் காட்டலாம்.

இப்படியாக இலங்கை வரலாற்றில் பௌத்த எழுச்சியின் மூலமாக குறிப்பிடப்படும் ஆரியம் பௌத்த எழுச்சிக்கு அடிகோலினாலும் இந்தக் கோட்பாடும் அதனோடு இணைந்த பௌத்தமும் சமகாலப்பகுதியில் பௌத்தமயமாக்கலையே இலங்கையில் வெளிப்படுத்தி வருகின்றன. இதனால் இலங்கையில் ஏனைய மதப்பண்பாடுகள், கலை மரபுகள் சிதைவடைந்து வருவதோடு அவற்றை வெளிக்கொணர்வதற்காக எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படாமலேயே காணப்படுகின்றன. குறிப்பாக பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இந்து மதமே இந்நாட்டு மக்களின் மதமாக விளங்கியுள்ளது. (குணராசா, 1996) மேலும் இலங்கையில் விஜயன் குழுவினர் இலங்கை வரும் முன்னரே இலங்கையில் நாகரிகத்தில் முன்னேறிய ஒரு மக்கட் கூட்டமும், பண்டைய வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு வாழ்ந்த ஒரு மக்கட் கூட்டமும் வாழ்ந்து வந்துள்ளன. (குணராசா, பார்க்க) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் "பகைவராக வந்த சிங்களவர், ஓரளவு நாகரிகமடைந்திருந்த மக்கள் வசத்தில் இந்த நாடு இருந்ததைக் கண்டனர்" என பார்க்கர் என்பவர் தன் "புராதன இலங்கை" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (Parker, 1909) இவற்றின் அடிப்படையில் இலங்கையில் விஜயன் வருகை அதாவது ஆரியர் வருகையின் முன்னர் ஒரு நாகரிகமடைந்த இனம் இருந்துள்ளதுடன், இந்து சமயப் பண்பாடுகளுக்கான தடயங்களும் காணப்படுவதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இருப்பினும் ஆரியக் கோட்பாடும், அதனோடு இணைந்த பௌத்தமும் இலங்கை வரலாற்றை ஆக்கிரமித்து காணப்படுகின்றமையால் இவற்றின் மீதான இவற்றைப் பலப்படுத்தும் ஆய்வுகளே இன்றளவும் மேற்கொள்ளப்படுகின்றன என்று குறிப்பிடலாம். குறிப்பாக ,இன்றைய இலங்கையில் சமகாலத்தில் பௌத்தமயமாக்கல் தமிழர் செறிந்து அதிகமாக வாழும் வட இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக தையிட்டி விகாரை விவகாரம், குருந்தூ ர் மலை ஆதி சிவன் கோவில் பகுதிகளில் அமைக்கப்பட்ட விகாரை என்பன இஇலங்கை முழுவதும் பௌத்தப் பண்பாடுகள் தனித்துவமாக நிறுவப்படுவதற்கான முயற்சிகளாகக் குறிப்பிடலாம். இதனால் தான் இன்றளவிலும் வரலாற்று முக்கியம் வாய்ந்த இந்து ஆலயங்கள், இந்து விக்கிரகங்கள் என்பவை பாதுகாக்கப்படாமல் அழிவுறும் நிலையில் காணப்படுகின்றன. இதற்குச் சான்றாக பூநகரி மண்ணித்தலை சிவாலயம் இன்றளவும் அழிவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

இது இந்து கட்டிடக்கலை பாரம்பரியத்தை அறிந்துகொள்ள உதவும் ஒரு கட்டிடக் கலையம்சமாகும். (கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையின் மூலகங்கள்) குறிப்பாக பண்டைய இந்துப் பண்பாட்டின் கலைச்சிறப்பையும், பெருமையையும் வெளிப்படுத்தி நிற்பதில் கற்பக்கிரகத்தில் மேலமைந்த விமானம் முக்கிய பங்கு வகிக்கின்றது. மற்றும் இதன் கற்பக்கிரகம் பொழிந்த சிறிய முருகைக்கற்களையும், கடலிலிருந்து எடுக்கப்பட்ட கற்களையும் கொண்டு சுதையினால் கட்டப்பட்டுள்ளன. கற்பக்கிரக சுவாசப் பகுதி மட்டும் ஒரே நீளமாக அமைந்த முருகைக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. (பாலசுப்ரமணியம், 1965) மற்றும் இவ் ஆலயக்கலை மரபின் மற்றொரு சிறப்பு அதன் அடித்தளம் மற்றும் கோமுகி அமைப்புக்கள் ஆகும். தொழிநுட்ப வேலைப்பாட்டைக் கொண்ட இக்கோமுகி, வைரமான வெள்ளை முருகைக்கல்லில் அப்படியே லிங்க வடிவத்தை பிரதிபண்ணி அதன் நுனிப்பாகம் சற்று கீழ் நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. (சிவசாமி, 1975) இவ்வாறு பல கலைத்துவ அம்சங்களைக் கொண்ட ஆலயம் இன்றளவும் அழிவடைந்த நிலையில் காணப்படுவது, ஆரியமும் பௌத்தமும் பிற பண்பாட்டம்சங்களை நலிவுறச் செய்துள்ளன என்றே குறிப்பிட முடியும்.

மேலும் பொலநறுவையில் சோழர்காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்களும் இந்துப் பண்பாட்டின் கலைத்துவத்தை வெளிப்படுத்துவதாகவே இன்றளவும் காணப்படுகின்றன.

இதுவரை பொலநறுவை இராசதானியில் 14 இந்துக் கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் 2ஆம் சிவ தேவாலயம் சோழர் காலக் கட்டிடக்கலையில் உன்னத வளர்ச்சியை எடுத்துக்காட்டும் பொலநறுவையிலுள்ள இந்துக் கோயில்களும் சிறந்த கோயிலாகவும் காணப்படுகின்றது. (பத்மநாதன். 2000) இவ்வாறு இந்துக் கட்டிடக்கலையம்சங்களை வெளிப்படுத்தும் பல கலைப் பொக்கிஷங்கள் இலங்கையில் காணப்பட்டாலும் இன்றளவிலும் பெரும்பான்மையினரான சிங்களச் சமூகத்தின் ஆட்சி அதிகாரத்துடன் இணைந்த பௌத்த சமயமயமாக்கல் ஏனைய மதப் பண்பாடுகள், கலையம்சங்களை மழுங்கடிக்கின்றன என்று குறிப்பிட்டுக் காட்ட முடியும். இவ்வாறு புராதன காலம் தொட்டு இன்றுவரை ஆரியக் கோட்பாட்டைத் தளமாகக் கொண்டு இலங்கை வரலாற்றில் பௌத்த மதப் பண்பாடுகள் நிறுவப்படுவதை வெளிப்படுத்திக் காட்டலாம்.



இலங்கையில் ஆரியக் கோட்பாட்டு அடிப்படையில் தனித்துவப் பண்பாடாக பௌத்த சமயப் பண்பாடுகள் இலங்கையில் புராதன காலம் தொடக்கம் தற்காலம் வரை நிறுவப்பட்டிருக்கிறது என்றாலும் கூட, சமகாலத்தில் ஏனைய மதப் பண்பாடுகளும் மேலெழுந்து வருவதற்கான வாய்ப்புக்களைப் பௌத்த சமயம் திறந்து விட வேண்டும். ஆரிய வம்சாவளியான சிங்களச் சமூகத்தால் இலங்கை தேசம் ஆளப்பட்டு வந்தாலும், பௌத்தப் பண்பாடுகள் முக்கியப்படுத்தப்பட்டாலும் பல்லின மத சமூகம் வாழும் இலங்கை தேசத்தில் பௌத்த மயமாக்கல் நீக்கப்பட்டு பிற சமயக்கலை, கலாச்சாரங்கள் மீதும் சமய அரவணைப்புடன் அரசு செயற்படுவதினூடே பல்லின மத, இனப் பண்பாடுகள், கலைகள் பேணப்பட்டு ஒரு சுமூகமான தேசமாக இலங்கை திகழும் என ஆணித்தரமாகக் குறிப்பிட முடியும்.

# யாழில் இருந்து இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு தெரிவான வீராங்கனை




தெற்காசிய நாடுகளிற்கிடையிலான பதினெட்டு வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை தேசிய அணிக்காக யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் கல்லூரியை சேர்ந்த மாணவி லூட்சி றெஜினஸ் தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறான தெற்காசியமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தி வடமாகாண பாடசாலை மாணவி ஒருவர் தேர்வு செய்யப்பட்டமை இதுவே முதல் முறையாகும்.

இந்த நிலையில் இலங்கையில் இடம்பெற்ற போட்டியில் இந்தியாவுடன் மோதிய இலங்கை அணி இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மாணவியின் பயிற்சியாளராக தனுஷ் ராஜசோபனா அவர்கள் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.


அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு

# கராத்தே போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவி தங்கம் வென்றார்



வட மாகாண பாடசாலைகளுக் கிடையிலான கராத்தே போட்டிகள் யாழ்ப்பாணம் அருணோதயக் கல்லூரியில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இப்போட்டிகளில் மாகாணத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பல திறமையான வீராங்கனைகள் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதில் 20 வயது க்குட்பட்ட பெண்களுக்கான 50 கிலோகிராமுக்கு மேற்பட்ட எடைப்பிரிவின் கீழ் நடைபெற்ற கராத்தே குமுத்தே (Kumite) நிகழ்வில் யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஆன்திவிஷனா பங்குபற்றியிருந்தார். போட்டி முழுவதும் மிகச் சிறந்த ஆட்டத் திறனை வெளிப்படுத்திய அவர், இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று முதலாமிடத்தை தனதாக்கிக் கொண்டார்.

வடமாகாண அளவில் நடைபெற்ற இக்கடினமான கராத்தே போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்த மகாஜனக் கல்லூரி மாணவி ஆன்திவிஷனாவுக்கு பாடசாலை சமூகத்தினரும், விளையாட்டு ரசிகர்களும் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்



# ஈழத்தமிழர்கள்

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

## 1.ஈழத் தமிழரின் உயிர் எழுச்சி

மண்ணின் வாசனைக்கு
இரத்தம் சொந்தம் சொல்லும் மக்கள் நாம்.
தொட்டிலில் விழுந்த முதல் கண்ணீர் கூட
வீரத்தின் விதையாய் மாறியது.

உறங்காத இரவுகள் துன்பம் ஆனாலும்
உறுதி மட்டும் விழித்திருந்தது.
சாம்பலான வீடுகளின் நடுவிலும்
நம்பிக்கை குயிலாய் பாடியது.

போரின் புகை மூட்டத்தைக் கிழித்து
ஒளியாக எழுந்தது நம் ஆன்மா.
இழந்தவற்றைக் கணக்கிடாமல்
இனத்தை காக்க உயிரைக் கொடுத்தோம்.
மனத்தின் ஆழத்தில் எரிந்த காயங்கள்

உலகிற்கே சொன்னது நம் வீரத்தை.
அச்சத்தின் நடுவே கூட
அன்பை பாதுகாக்க கற்றோம்.
தாய் தந்தையை இழந்த சிறுவர்கள்
சிரிப்பை மறக்காமல் நின்றார்கள்
அது தான் ஈழத் தமிழரின்
உயிர்த்துடிப்பின் அதிசயம்.

வேதனையை மறைத்து
வலிமையாய் புன்னகைப்பது நம் பண்பு.
நினைவுகளில் காயங்கள் இருந்தாலும்
நெஞ்சில் எரியும் தீ உணர்வு ஒன்றே -
நாம் இன்னமும் உயிருடன் நிற்கிறோம்.

சமூகம் சிதறாமல் சேர
ஒற்றுமையை உள்ளத்தால் கட்டினோம்.
இழப்பின் பள்ளத்தாக்கிலும்
எதிர்காலத்துக்குச் சாலை அமைத்தோம்.

சத்தமாக அல்ல,
சொல்ல முடியாத அமைதியில்தான்
நம் வரலாறு அழுது கொண்டிருக்கிறது.
ஆனால் அந்த அமைதியின் உள்ளே
அழிக்க முடியாத அடையாளம் -
ஈழத் தமிழரின் வீரத் தீச்சுடர்.

### 2.ஈழத்தின் எழுச்சி

சாய்ந்திடா மனம் இல்லை - சாய்ந்தாலும் சற்றே,
சாமர்த்தியச் செங்கோல் தூக்கியெழும் சாதனைத் தலைமுறையே
காற்றில் கூட போரின் குரல் - களத்தை நினைவூட்டும்,
கண்ணீரை வலிமையாக்கி கனவுகளைச் செதுக்கிக் காட்டும்.

மண்ணின் ஒவ்வோர் துகள் சொல்லும் மறக்கமுடியாத வீரத்தை,
மரத்தின் நிழல் போல காக்கும் அந்தப் பரம்பரைத் தீரத்தை.
சிதைந்த சுவர்கள் கூட சொல்கின்றன எழுந்தெழும் முயற்சிகளை,
சிந்தனையின் வழியே கட்டியெடுக்கும் கல்வியும் சாதனைகளையும்.

மூச்செல்லாம் போராட்டமாய் மாறினாலும் — புன்முறுவல் தளராது,
மூதாதையர் பாதம் காட்டிய தேச நெஞ்சம் நிலை தடுமாறாது.
ஈழம் என்பது பெயரல்ல — பேரொலி போல் நிற்கும் பெருமை,
எதிர்காலம் எழுதும் பக்கங்களில் எந்நேரமும் உயர்ந்திருக்கும்
நினைவு திறமை!

### ஈழத் தமிழர்: தொன்மை, வரலாறு மற்றும் பண்பாட்டு சான்றுகள்

ஈழத் தமிழர்கள் உலகில் மிகப் பழமையான இனக்குழுக்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றனர். அவர்களின் வரலாறு தமிழ் மொழியின் தொன்மையை மட்டுமல்ல, கலாச்சாரம், சமூக அமைப்பு, வர்த்தகம், கல்வி, கலை மற்றும் இசை ஆகிய அனைத்திலும் கண்ணோட்டத்துடன் பல்லாண்டு வளர்ந்தது. கிமு 2ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஈழத் தமிழர்கள் வாழ்ந்ததாக அகழாய்வு சான்றுகள் காணப்படுகின்றன. திருகோணமலை, யாழ்ப்பாணம், கந்தரோடை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் மற்றும் கோவில் அடிக்கோல்கள், ஈழத் தமிழர்களின் பண்பாட்டு, ஆன்மீக, கல்வியியல் வளர்ச்சியின் அடையாளமாகின்றன. சங்க இலக்கியங்கள் “ஈழம்” என்ற சொல்லை நியாயப்படுத்தும் வகையில் குறிப்பிடுகின்றன. ,தில் ஈழச் சங்கம், யாழ் இசை, வர்த்தக உறவுகள், சமூக கட்டமைப்புகள் தெளிவாக வர்ணிக்கப்படுகின்றன. இதேசமயம், பண்டைய நாணயங்கள், மண்டபக் கல்வெட்டுகள், கடற்கரை வர்த்தக பதிவுகள் ஆகியவை ஈழத் தமிழர்களின் கடலோர நாகரிக மற்றும் வணிகத் திறனையும் வெளிப்படுத்துகின்றன.

சோழர், பாண்டியர், பல்லவர் காலங்களில் ஈழம் ஒரு முக்கிய பாகமாக இருந்து, அரசியல், வர்த்தக மற்றும் பண்பாட்டு தொடர்புகளில் ஈழத் தமிழர்கள் முன்னணி வகித்தனர். சோழப் பேரரசின் கடற்படை இலங்கையின் வடக்குப் பகுதிகளை அடைந்ததில், திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் கோவில் கட்டிடக்கலை, சமூக அமைப்பு மற்றும் கல்வி மரபுகள் விரிவடைந்தன. சான்றுகள் காட்டும் வகையில், கல்வெட்டுகளில் காணப்படும் நிர்வாகச் சாசனங்கள், வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் சமூக சட்டங்கள், ஈழத் தமிழர்கள் நிலைத்திருந்த சமூக அமைப்பையும் நிரந்தரமான கல்வி மற்றும் நீதித் திறனையும் வெளிப்படுத்துகின்றன.



காலனித்துவம் வந்தபோது, போர்த்துகீசர், டச்சு மற்றும் பிரிட்டிஸ் ஆட்சியின் கீழ் ஈழத் தமிழர்கள் கல்வி, வணிகம், நிர்வாகம், சட்டம் போன்ற துறைகளில் முன்னேற்றத்தை தொடர்ந்தனர். யாழ்ப்பாணம், நெல்லிக்குளம் போன்ற இடங்கள், கல்வி மையங்களாக, இலக்கிய மற்றும் அறிவியல் ஆய்வுக் கூடங்களாக வளர்ந்தன. இந்தக் காலத்தில் ஈழத் தமிழர்கள் சமூக, பண்பாட்டு மற்றும் பொருளாதார வளங்களை உருவாக்கி, அடுத்த தலைமுறைக்கான வலிமையான அடித்தளத்தை அமைத்தனர்.

இன்றைய ஆய்வுகள், ஈழத் தமிழர்கள் தமது பண்பாட்டையும் மொழியையும் தன் இடத்தில் வைத்தே, புலம்பெயர்ந்த பிற நாடுகளிலும் தனது அடையாளத்தை பேணிச் செல்கிறார்கள் என்பதை காட்டுகின்றன. மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேற்றப்பட்ட ஈழத் தமிழர்கள், குழந்தைகளுக்கு தமிழ் மொழி, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு விழாக்களை கற்றுத் தருகின்றனர். இது அவர்களின் பன்முகத்தன்மை மற்றும் சமூக உறுதியின் சிறந்த உதாரணமாகும்.

புலம்பெயர்வு மற்றும் போராட்ட காலத்திலும், ஈழத் தமிழர்கள் கல்வி, மருத்துவம், தொழில்நுட்பம், பொறியியல், சட்டம், கலை மற்றும் இலக்கியம் போன்ற துறைகளில் உலக தரப்பில் முக்கியமான சாதனைகளை உருவாக்கி வருகின்றனர். சமூக மறுவாழ்வு, மனநலம், குடும்ப ஒற்றுமை, கல்வி வளர்ச்சி ஆகியவற்றில் அவர்கள் காட்டும் மனவலிமை உலக சமூக அறிவியல் ஆய்வுகளின் “High Resilience Communities” எனும் வகுப்பில் பெருமளவு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஈழத் தமிழர்களின் பண்பாட்டு விரிவிலும் அவர்களின் பன்முகத்தன்மை வெளிப்படுகிறது. சமையல், இசை, நடனம், திருமண விழா, மத மற்றும் சமூக விழாக்கள் போன்ற பண்பாடுகள் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தொடர்கின்றன் புதிய சூழல்களுக்கு ஏற்ப மாற்றப்பட்டாலும், அதன் அடிப்படை நோக்கம்--அன்பு, ஒற்றுமை, மரியாதை மற்றும் ஆன்மீக நம்பிக்கை-

அதேபடி பாதுகாக்கப்படுகிறது. உலக மொழியியல் ஆய்வுகள், புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் மரபையும் புதிய சூழலையும் இணைத்து வாழும் திறனை “Adaptive Cultural Intelligence” எனக் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு, ஈழத் தமிழர்கள் தொன்மை, வரலாறு, பண்பாடு, கல்வி, சமூக மறுவாழ்வு, உலகளாவிய சாதனைகள் ஆகிய அனைத்திலும் பன்முகத்தன்மையுடன் நிறைந்திருக்கிறார்கள். அவர்களின் அடையாளம், சாதனைகள் மற்றும் வலிமையான பாரம்பரியத்தின் மூலமாக, உலகம் முழுவதும் தமிழர் சமூகத்தின் பெருமையை வெளிப்படுத்துகிறது. இந்த பன்முகத்தன்மை மட்டுமல்ல, அதே சமயம் புதிய தலைமுறைக்கான உயிருடனான வழிகாட்டியையும் வழங்குகிறது. அவர்களின் வரலாறு, மொழி, கலாச்சாரம் மற்றும் சமூக மீட்சி திறன் உலகளாவிய தமிழர்களின் அடையாளம் மற்றும் பெருமை ஆகியவற்றின் உறுதிப்பாக நிலைநிறுத்துகிறது.





# போதையின் பாதையில் பேதை நெஞ்சங்கள்

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

.

மனிதனின் வாழ்க்கை என்பது முடிவில்லா தேர்வுகளின் சுழற்சி. ஒவ்வொரு கணமும் நம் வாழ்வின் சரியான பாதைக்கு அழைக்கன்றதோடு, தவறான வழிகளுக்குப் இழுக்கும் பல வண்ணமான குரல்களும், நிழல்களும் நம்மை சுற்றிக் கொள்கின்றன. அவற்றில் மிகவும் ஆபத்தான சப்தம் ஒன்று என்றால் அது போதைப்பொருள்களின் மயக்க அழைப்பு. “ஒரு தடவை மட்டும் முயற்சி பண்ணி பாரு…” என்று தொடங்கும் இ,ந்த அழைப்பு, ஆயிரக்கணக்கான இளம் உயிர்களை அழிவின் ஆழத்தில் தள்ளியிருக்கிறது. இதற்காகவே பல உளவியல் அறிஞர்கள் மனிதனின் போதை பழக்கத்தைக் ‘Slow suicide of the soul’ என்கிறார்கள். ஒரு காலத்தில் போதைப்பொருள் பயன்பாடு சில வட்டாரங்களுக்குள் மட்டுமே இருந்தபோதிலும் இன்று அது பள்ளி மாணவர்கள் முதல் பல்கலைக்கழக இளையர்கள் வரை, சிற்றூரிலிருந்து உலக நகரங்களில் வரை, திடப்படுத்தப்பட்ட சட்டங்களில் இருந்தும் சிக்கலான சமூக காரணிகளில் இருந்தும், மிகுந்த வேகத்திலும் ஆபத்திலும் பரவி வருகிறது. “போதையின் பாதையில் பேதை நெஞ்சங்கள்” என்ற தலைப்பு, இந்த சமூக

நோயின் ஆழத்தையும், மனித மனத்தின் தவிப்பையும், எளிய தவறான முடிவுகள் எவ்வாறு வாழ்வையே சிதைக்கின்றன, அதிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

சமகால மானிட சமூகத்தில் தலைதூக்கி நிற்கின்ற முக்கிய பிரச்சினையாக, குறிப்பாக இளம் சமுதாயத்தின் வாழ்க்கையை பெரிதும் கேள்விக்குறி ஆக்கி வருகின்ற தீவிர பிரச்சினையாக விளங்குவது போதைவஸ்து (Drugs) ஆகும். இது உடல், உள, சமூக, ஆன்மீக சமனிலையை தாக்கி, ஆளுமையை சீரழிக்கும் நஞ்சாகக் குறிப்பிடப்படுகின்றது. பொதுவாக போதைப்பாவனை என்பது மனதையும், உடலையும் பாதிக்கும் இரசாயனங்களை பயன்படுத்தி நிற்பதைக் குறிக்கும். உளவியலின் அடிப்படையில் அதிகபட்ச போதைப்பாவனை “நடத்தைப் பிறழ்வுகள்” ஏற்படுத்துவதாக ஆய்வுகள் குறிப்பிடப்படுகின்றன. போதை அடிமை என்பது போதைப் பழக்கத்தைக் கொண்ட ஒரு நபர் தெரிந்தோ / தெரியாமாலோ தற்போது வரை போதையில் தங்கியிருக்கும் நிலையை குறிக்கின்றது. இவ் நிலைமை “Drug Addction / Drug Dependency” என அழைக்கப்படும் ஒரு நோய் நிலைமை ஆகும். இது தனிநபர் சம்பந்தப்பட்டதாக அமைந்து பின்பு பிறழ்வுகள் மற்றும் பிரச்சினைகள் சமுதாயத்தில் பல்வேறுபட்ட பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இது நரம்பியல் மண்டலத்தை பாதித்து உணர்ச்சிகள், சிந்தனை, நடத்தை மற்றும் உணர்வுகளை மாற்றக்கூடிய தன்மை கொண்டவை.

போதைக்கு அடிமையாகிய ஒருவர் சமுதாய வாழ்விலிருந்து விலகி அந்நியமாவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளது. போதைப்பாவனையால் பொதுவிதிகளை முறிக்கும் நடத்தைகள் ஏற்படுவதாக துநளளழச கூறுகின்றார். அத்துடன் இது ஓர் “Deviant Behaviour (பிறழ்வு நடத்தை)” என்றும் சுட்டிக் காட்டுகின்றார். உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான போதைவஸ்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மது (அங்கஹஸ்), கானாபிஸ், கெரோயின், மோர்பின், கொடின், பாபிரு ஹோறல், அம்ராமனஸ், மெஸ்கிரயின், மெற்டேன் கொகேயின், L.S.D> D.M.T, சிலோபின், புகையிலை, கஞ்சா, ஐஸ் முதலான பல்வேறு வகையான போதை வஸ்துக்கள் பல்வேறு தாக்கங்களை உலகளாவிய ரீதியில் உண்டுபண்ணுகின்றன.

நமது நாட்டிலும் (இலங்கையிலும்) அண்மைக்காலங்களில் அதிகரித்த பாவனை காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. "இலங்கையில் நாளாந்தம் 40 -50 பேர் மதுப்பழக்கத்தால் மரணமடைகின்றனர்" என மது மற்றும் போதைப்பொருள் மையம் தெரிவிக்கின்றது. அத்துடன் சாராயம், பியர் ஆகிய மதுபான நுகர்விற்காக சுமார் 690 மில்லியன் ரூபாவை நாளொன்றிற்கு செலவிடுவதாகவும் கூறப்படுகின்றது. "தேசிய அபாயகர போதை திருப்பு சபை (National Dangerous Drugs control board – NDDCB)" 1984 இல் நிறுவப்பட்டது. இதின் அறிக்கைப்படி 40 000 மேற்பட்டோர் போதைப்பொருள் பாவனையின் மூலம் நிரந்திர அடிமையாக்கப்பட்டுள்ளனர் எனக் கூறுகின்றது. இவ் நிறுவனமானது போதைத் தடுப்பு, மீட்பு மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளைச் செய்வதுடன் விழிப்புணர்வுகள், ஆலோசனைகளையும் நிகழ்த்தி வருகின்றது.

உலக சுகாதார அமைப்பின் (WHO) சமீபத்திய அறிக்கையின்படி உலகம் முழுவதும் 35 கோடியே அதிகமான மக்கள் பல வகையான போதைப்பொருட்களை முறையாகவோ, தவறாகவோ பயன்படுத்தி வருகிறார்கள். பல்வேறு Medicated drugs இந்த பட்டியல் நாளுக்கு நாள் நீளுகிறது. உலகளாவிய அளவில் போதைப்பொருட்களின் பரவல், உலக பொருளாதார அமைப்புகளால் மட்டுமில்லை தனிமை, மன அழுத்தம், துரதிஸ்டவசமான சமூக மாறுபாடுகள், வேலை இழப்பு, வன்முறை சூழல்கள், மன நலம் பாதிப்புகள், தனி மனிதன் எதிர்கொள்ளும் உணர்ச்சி வெற்றிடங்கள் போன்ற உளவியல் காரணிகளாலும் வலுப்பெறுகிறது. ஒருவரின் மனதைப் புரிந்துகொள்ளாத குடும்ப சூழல், பேச்சு வாய்ப்புகள் இல்லாத துயரம், "யாருக்கும் என் வலி புரியவில்லை" என்ற மன நிலை என ,வை அனைத்தும் போதைக்கு கதவை திறந்துகொடுக்கும். "பழக்கத்திற்கு வழிவகை செய்யும் மன வெற்றிடம், வாழ்வின் மிக ஆபத்தான வெற்றிடம்" என்று Carl Jung கூறியது இதற்குள்ள ஆழப்படை குறிக்கிறது.

போதை அடிமையாதலிற்கு பல காரணங்கள் காரணமாகின்றன. அந்தவகையில்

தவறான அறிகை மற்றும் நம்பிக்கை (போதை – வீரம், சந்தோசம், வலி நீக்கும், உஷாரை ஏற்படுத்தும் என்ற தவறான அறிக்கை மற்றும் நம்பிக்கை)

- முறையான தண்டனைகள்
- தாழ்வு மனப்பான்மை

- ஒதுங்கியிருத்தல்
- அதிகார உணர்வு
- நாகரீக மாற்றம்
- Enjoyment Purpose
- சினிமா
- தவறான நண்பர்கள் சேர்க்கை

காணப்படுகின்றன. அதிகாரத்தன்மை, போதையை அதிகமாக உள்ளெடுத்தல், சகிப்புத்தன்மை இன்மை, ஒதுங்கியிருப்பு, பொறுப்புக்களிலிருந்து விடுபடல், போதையில் அதிக நாட்டம், உடல் காயங்கள், போதை உள்தொடுப்பதில் ஆர்வம், விருப்பு போன்றவற்றை அதிகளவாகக் கொண்டிருப்பர்.

,ளைய தலைமுறை அதிகமாக போதைக்கு ஈர்க்கப்படுவது ஏன்? அதற்கான மூன்று உளவியல் காரணங்கள் மிக முக்கியமானவை:
(1) அடையாள தேடல் – “நான் வேறுபட்டவன்” என நிரூபிக்க வேண்டும் என்ற தவறான உணர்வு
(2) சமூக அங்கீகாரம் பெறும் ஏக்கம்
(3) தற்காலிக தப்பிப்பு – உணர்ச்சி வலியிலிருந்து தப்பிக்க வேண்டிய
வாழ்வின் அர்த்தம் தெரியாத தருணங்களில், மனச்சோர்வு தன்னுள் பெருகும் வேளைகளில், “இது ஒரு சிலநேர அமைதி கொடுக்கும்” என்று போதையின் பொய் நம்பிக்கை இளைய நெஞ்சங்களை சிக்கவைக்கிறது. ஆனால் அதே நிமிட அமைதி, எதிர்காலத்தை நிமிடங்களில் அழித்து விடும் என்பது உண்மை.

“போதை” என்பது உடலை மட்டும் இல்லை, மனிதனின் ‘எதிர்கால நினைவுகளை’ அழிப்பது. நாளைய கனவுகள், திறமைகள், குடும்பத்தின் நம்பிக்கைகள், சமூகத்தின் எதிர்பார்ப்புகள் – அனைத்தும் மெதுவாக நாசமாகின்றன.

இதன் விளைவுகள் தனி நபரை மட்டுமல்லாது குடும்பம், சமூகம் என பாதிப்பை ஏற்படுத்தி உலகளாவிய ரீதியில் பல விளைவுகளையும் உண்டுபண்ணுகின்றன. அந்த வகையில்

- உடல் - மூளை பாதிப்பு
  நரம்பு மண்டல பாதிப்பு
  தற்கொலை முயற்சி
  ஈரல் பாதிப்பு
  இதய பாதிப்பு
  இரப்பை அழற்சி

❖ உளம் - மறதி அதிகரிப்பு
வெறுப்பு, பயம்
திருமண வாழ்வு பாதிப்பு
பிரம்மை ஏற்படல்
பாலியல் திருப்தியின்மை / ஆர்வமின்மை
உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமை
அதிகரித்த மனவெழுச்சிகள்
மனச்சோர்வு

❖ சமூகம் - சமூகச் சீர்கேடுகள்
துஷ்பிரயோகங்கள்
சண்டைகள்
விபத்துக்கள்
குற்றச் செயல்கள் அதிகரிப்பு
விவாகரத்துக்கள்
பொதுச்சொத்துக்கள் நாசமாக்குதல்
குடும்பப் பிரச்சினை
முதலான பல்வேறுபட்ட விளைவுகள் ஏற்படுகின்றன.

இப்போது சிறப்பு கவனம் - இலங்கை தமிழ் இளைஞர்கள் சூழல். இலங்கையில் போதைப்பொருள் தொடர்பான வழக்குகள் கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. “ICE“ (Methamphetamine) மற்றும் “Heroin“ மிக வேகமாக பரவி வருகின்றன. 2024-2025 காலத்தில் மட்டும் ஏறக்குறைய 30>000+ இளையர்கள் பிடிபட்டுள்ளனர், இதில் பலர் பள்ளி , தொழிற்பயிற்சி , பல்கலைக்கழகம் நிலை இளம் ஆசிரியர்கள், மாணவர்கள், வேலை தேடுபவர்கள். சமூக அமைப்புகள் தெரிவிப்பதாவது, போதை விற்பனை ஒரு சாதாரண குற்றம் இல்லை, அது ஒரு வியாபார வலை, அரசியல், பொருளாதாரம், கடத்தல் வணிக அமைப்புகள் ஆகியவற்றின் பின்னணியுடன் இயங்குகிறது. இதனால் சாதாரண இளைஞர் மட்டும் குற்றவாளி மட்டும் அல்ல என்பதைதை புரிந்துகொள்ளாமல் “அவன் கெட்டவன்” என்று தள்ளிவிடுவது பிரச்சினையை தீர்க்காது.

உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன:
போதைக்கு அடிமையான பெரும்பாலானவர்களுக்கு முன்னோக்கிய எதிர்காலத் திட்டங்கள் இல்லாத நிலை உள்ளது. குழப்பமான வாழ்வியல் அமைப்பு, குடும்பத்தில் communication gap, தள்ளிப்போன அக்கறை, காதல் தோல்வி, வேலை வாய்ப்பில்லாத

துயரம் ஆகியவை உள்ளுணர்வுகளை பலவீனப்படுத்துகின்றன. பலர் உதவி கேட்க முடியாமல் மனதில், சாலைகள் தடைப்பட்ட நகரம் போல முடங்கி விடுகிறார்கள். அதனால் தான் உளவியலில், போதை அடிமை என்பது நோய் என்று கருதப்படுகிறது. இதனை வெல்வது தண்டனை மூலம் அல்ல புரிதல்,மருத்துவ உதவி சமூக நேசம், மனநல ஆலோசனை மூலம். சமூகத்தில் விழிப்புணர்வு என்பது மிக முக்கியம். “போதைவழி செல்வது சுதந்திரமல்ல அது சுதந்திரத்தை இழக்கும் கோவிலின் வாசல்.” என்று Sri Lankan psychiatrist Dr. Ravindran கூறினார். பள்ளிகளில் இருந்து கல்லூரிகள் வரை Life Skills > Emotional Intelligence Education அவசியம். இளைஞர்களுக்கு சொல்லப்பட வேண்டியது: சக்தி என்பது உடலில் இல்லை மனதை கட்டுப்படுத்தும் திறனில் உள்ளது. இதனைவிட, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால், முதலில் நாம் சமூக மனநிலையை மாற்ற வேண்டும். போதைப்பொருள் பயன்படுத்துபவர் ‘தவறு செய்தவர்’ மட்டுமல்ல் அவர் ‘வலி கொண்டவர்’ என்றும் புரிந்து கொள்வதே நலமான திசை. Prevention வார்த்தை மட்டும் அல்ல அது குடும்பம், பள்ளி, சமூக அமைப்புகள், அரசு, மருத்துவத் துறை, தொழில் வாய்ப்புகள், மீளுருவாக்க மையங்கள் ஆகிய அனைத்தும் இணைந்து செயல்படும் ஒரு நீளமான பயணம்.

முதலில் குடும்பம் – குழந்தைகளின் மனத்தில் “நான் யாரிடம் வேண்டுமானாலும் பேசலாம்” என்ற பாதுகாப்பான உரையாடல் வெளி இருக்க வேண்டும். திருமணம், வேலை, தோல்வி, காதல், அழுத்தம், துக்கம் போன்ற நுட்பமான விடயங்கள் கூட “வெளியில் பேசக்கூடாதது” என்று குடும்பத்தில் சுவரால் மூடப்பட்டால், இளம் நெஞ்சங்கள் தன்னுள் சிக்கி கொள்கின்றன, அங்கேயே போதை அழைப்பு நுழைகிறது. அதனால், குடும்பத்தில் ‘Communication Culture’ என்பது Prevention இன் முதல் மருந்து. அடுத்ததாக பள்ளி மற்றும் கல்லூரி மட்டத்தில் மனநலம் கல்வி அவசியம். நாம் குழந்தைகளுக்கு கணக்கு, அறிவியல், இலக்கியம் கற்பிக்கிறோம். ஆனால் உணர்வுகளை எவ்வாறு சமாளிப்பது என்ற திறனைக் கற்பிக்க மறக்கிறோம். Life Skills Education என்ற பாடம் ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் கட்டாயமாக்கப்பட வேண்டும். “Stress management> Emotional intelligence> Decision making> Anger control> Peer pressure resistance” போன்ற பயிற்சிகள் மாணவர்களுக்கு மன உறுதியை உருவாக்கும். உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் மனிதன் தான் வாழ்க்கையை கட்டுப்படுத்துபவன்.

சமூக மட்டத்தில், போதைப் பொருள் விற்பனையை கட்டுப்படுத்துவது மட்டும் போதாது அதற்கு ஆதாரமான கும்பல் வணிகங்களையு, அரசியல் நிழல்களையும் சட்டரீதியாக முறியடிக்க வேண்டும். சட்ட ஒழுங்கு வலுவாக இருக்கும்போதும், சமூக பங்கேற்பு இல்லையெனில் பிரச்சனை தொடரும். போதை விற்பனை நடைபெறும் பகுதிகளில் Community Vigilance Groups> Youth Clubs> Cultural sports movements போன்ற அமைப்புகளை வலுப்படுத்துவது மிக அவசியம். இளைஞர்கள் கலை, விளையாட்டு, சேவை அமைப்புகள், Red Cross போன்ற சமூக ஈடுபாடுகளில் இணைந்தால், மன வெற்றிடங்களுக்கு இடமில்லை.

Rehabilitation (மீளுருவாக்கம்) என்பது இந்தப் போராட்டத்தின் இதயம். போதைப் பழக்கத்தில் சிக்கிய இளைஞனை "நீ தவறிவிட்டாய்" என்று குற்றம்சாட்டுவதில் எந்த பயனும் இல்லை. அவனை மெதுவாக கைகளில் தூக்கி வாழ்க்கைக்கு திரும்ப வைப்பதே நம்முடைய மனிதத் தன்மை. மனநல ஆலோசனை, சிகிச்சை, மருத்துவ Detoxification> Meditation & Yoga therapy>Group counselling>Family therapy போன்ற மீளுருவாக்க நடைமுறைகள் உலக நாடுகளில் வெற்றிகரமாக நடக்கின்றன. இலங்கையிலும் பல Government & NGO Rehab Centres உள்ளன. ஆனால் அவற்றிற்கு மனித நேசமும், தொடர்ச்சியான வழிகாட்டுதலும் மிகவும் தேவை. Rehabilitation என்பது ஒரு நாள் சிகிச்சை அல்ல அது மனித மனதை மீண்டும் மலரச் செய்வது.

போதை தடுப்பு விழிப்புணர்வு (Awareness) என்பது பள்ளிகளில் வருடத்திற்கு ஒரு நாள் மட்டும் நடத்தப்படும் நிகழ்ச்சி அல்ல் அது ஒரு நாளாந்த உரையாடல். சமூக ஊடகங்கள், Youth influencers> Sports icons> Cultural leaders> Teachers> Counsellors> Health workers அனைவரும் ஒன்றுகூடி துல்லியமான தகவல்களை பரப்ப வேண்டும். போதை ஒரு "Style" அல்ல, அது "Silent Death" என்பதை இளைஞர்களுக்கு உணர்த்த வேண்டும். நாம் சொல்ல வேண்டிய உண்மைச் செய்தி:

, "சில நிமிட மகிழ்ச்சிக்காக, ஒரு வாழ்நாள் திறமைகளை அழிக்காதீர்கள்."

- பிரச்சினைகளை கையாளக் கற்றுக் கொடுத்தல் - பலர் தங்களுடைய பிரச்சினைகளை உரிய முறையில் கையாளத் தெரியாதனாலேயே இப்பழக்கத்திற்கு ஈடுபடுகின்றனர். ஆதலால் நம் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை கையாளவும், தீர்க்கவும் உரிய நல்வழிமுறைகள் மற்றும் நுட்பங்களை கற்றுகொடுத்தல்.

- அறிகை நடத்தை சிகிச்சை (Cognitive Behaviour Therapy) - தவறான எண்ணங்கள், அறிகையை மாற்றி நடத்தையிலும், அறிகையிலும் சீரான மாற்றத்தை ஏற்படுத்துவதை இச் சிகிச்சை முதன்மையாகக் கொண்டது. இச் சிகிச்சையால் புதிய சிந்தனைகள் ஏற்பட்டு நடத்தை சீரடைவதுடன் போதை அடிமையிலிருந்து மீளவும் உதவுகிறது.

- உரையாடல் திறன் வளர்ப்பு – தனது பிரச்சினைகள் மற்றும் கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பிறருக்கு வெளிப்படுத்தவும், பிறரின் கருத்துக்களை உள்வாங்கவும் பயிற்சியளிக்கப்படுகிறது. இதன் மூலம் உதவும் பண்பும் மேம்பாடு அடைவதுடன் நம்பிக்கை, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, மகிழ்ச்சி போன்றனவும் ஏற்படுகின்றது. ஆதரவும் கிடைக்கப்பெறுவதுடன் சலிப்பு, தனிமை, மனஅழுத்தம், மனச்சோர்வு என்பன குறைவடைகிறது.

- வைத்திய ஆலோசனைய மற்றும் மருத்துவ முறைகள் - அடிமைப்படுத்தும் மருந்துகள் மற்றும் போதையின் பிரச்சினை பற்றி வைத்தியரிடம் மற்றும் உள மருத்துவரிடம் ஆலோசனை பெறமுடியும். மருத்துவ முறைகள் மூலம் போதைப்பாவனை தணித்தல், மனநிலை மாற்றம், போதை அடிமையிலிருந்து மீளுதல், சரியான உணவு – நித்திரைப் பழக்கத்தை ஏற்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

- தளர்வுப் பயிற்சிகள் - உடல் மற்றும் உளத்தை தளர்வுபடுத்தி ஆசுவாசப்படுத்தும் பயிற்சிகளை உரிய நேரத்துடனும் அதற்கேற்ற இடத்திலும் இருந்து அதனைச் செய்தல். சுவாசப்பயிற்சி, தியானம், யோகாசனம், மந்திரஉட்சாடனம், உடற்பயிற்சிகள் என்பன மனத்தை மேம்படுத்தி நெருக்கீடுகள் ஏற்படாமல் தடுக்கின்றது.

- பொழுதுபோக்குகளில் ஈடுபடல் - ஓய்வு நேரத்தில் தமக்கு பிடித்தமான விளையாட்டுக்களிலோ, செயற்பாடுகளிலோ ஈடுபட ஊக்குவித்தல்

• நாளேடு எழுதுதல் - தான் செய்யும் தினசரி செயற்பாடுகள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றை நாளேட்டில் (Diary) தவறாது எழுதிவருவது இப் பழக்கத்திலிருந்து மீண்டெழுவதற்கு உதவுகிறது. இதனைத் தொடர்ந்து செய்வதின் ஊடாக புதிய எண்ணங்கள் ஏற்படுத்தப்படுவதுடன் நடத்தைகளும் வலுவூட்டப்படும் அத்துடன் மனமானது கட்டுப்பாட்டுடன் இயங்கவும் தொடங்குகிறது.

• வெறுப்பூட்டல் முறை - அருவருப்பு அளித்தல் மற்றும் அதிர்ச்சி விடயங்களுடன் போதைப்பொருள் இன்பத்தையும் இணைத்து அனுபவிக்க வைப்பதன் மூலம் வெறுப்பை ஏற்படுத்துவது இம்முறை ஆகும். போதைப் பொருளை உட்கொள்ள முயலும் போது மின் அதிர்ச்சி கொடுத்தல் அல்லது வெறுப்பூட்டும் காட்சியை கற்பனை செய்ய வைப்பதன் மூலம் இது இடம்பெறும்.

• குடும்ப ஆற்றுப்படுத்தல் - போதைக்கு அடிமையான நபர் குடும்பத்தில் உள்ளார் ஆயின் அவரை மீட்டெடுக்க வேண்டிய கடமை முழுக்குடும்பத்திற்கும் உண்டு. குறித்த நபரை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து எவ்வாறு மீண்டெழ பங்களிப்புச் செய்யலாம் என கற்றுக் கொடுக்க வேண்டும். இத்துடன் பிள்ளைவளர்ப்பு முறை, பிரச்சினை தீர்த்தல் நுட்பங்கள் போன்றனவும் கற்றுக் கொடுக்கப்படும்.

• கலை வழி குணமாக்கல் - சித்திரம், ஓவியம் வரைதல், சிற்பங்கள் செய்தல், கட்டுரை, கவிதை, சிறுகதைகள் எழுதித் தூண்டுவதின் ஊடே துன்பம் தீரும் அனுபவம் குறைவடைந்து குணமாக வழிவகுக்கும்.

• குழுவழி குணமாக்கல் - குறித்த பிரச்சினை உள்ளவர்கள் குழுவாக இணைந்து பிரச்சினை தீர்ப்பது பற்றி, உறவுகளை மேம்படுத்துவது, உதவுவது, ஆரோக்கியமாக பயணிப்பது போன்றவற்றிற்கான தெளிவுகிடைப்பது மட்டுமல்லாமல் நம்பிக்கை, ஒற்றுமை, குழு இணைவு, ஆளிடைத் தொடர்பு, உதவி செய்யும் மனப்பாங்கும் ஏற்பட்டு போன்ற அடிமையிலிருந்து மீண்டெழவும் உதவுகின்றது.

• ஊக்குவித்தல் - இப் பழக்கத்தை கைவிட எண்ணும் துணைநாடி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அவரை ஊக்கப்படுத்துவதுடன் சிறுவெகுமதி வழங்கல், பாராட்டுதல், புகழ்தல் என்பன தன்நம்பிக்கையை அதிகரித்து குறித்த போதைப்பழக்கத்தை களைய உதவுகின்றது.

- நச்சுநீக்கல் - மருந்துகள், ஊசி மூலம் போதையினால் ஏற்பட்ட நச்சுக்கள் அகற்றப்படும். இது “அமிலம் அகற்றல் (Detoxification)” எனவும் அழைக்கப்படும். இதனுடன் இணைந்து விற்றமின் மாத்திரைகளும் வழங்கப்படும். ஏன் எனில் அவர் போதிய சத்தான உணவுகள் உண்ணாததால் இது வழங்கப்படும். அத்துடன் தூக்கமின்மை சீர் செய்வதற்கான மருந்துகளும், ஈரல்,குடல் பாதிப்புக்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படும்.

- சமூக ஆதரவு – சமூக மட்டத்தில் குறித்த நபரை ,யங்க எத்தணித்தல். அத்துடன் சமூக செயற்பாடுகள், திருவிழாக்கள் மற்றும் கருத்தரங்குகள், தொழிற்பயிற்சிப் பட்டறைகளில் ஈடுபடவைத்தல். அத்துடன் விழிப்புணர்வு செயற்படுத்தலும், தொண்டர் சேவைகளிலும் இணைந்து பணியாற்று செய்வதுடன் சமூக நலத் திட்டங்களிலும் ஈடுபடச் செய்தல்.

- ஆசைமறுப்பு பயிற்சி அளித்தல் - போதை ஆசை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஊட்டப்படுகிறது. சகபாடிகள் மற்றும் சூழல் என்ற அடிப்படையில் இடம்பெறுகிறது. முதலில் ஒருவருக்கு சிறிதளவு போதைப்பொருள் கொடுத்தே அறிமுகம் செய்யப்படுகிறது. அதன் பின் அவருக்கு அதிகம் உட்கொள்ள வேண்டும் என்ற ஆசை தொடங்குகிறது. இதனால் அந்த ஆசையை மறுப்பதற்கான பயிற்சிகளை உரிய முறையில் அளிக்க வேண்டும்.

- தூண்டிகளை விலக்கல் - போதைப்பொருள் பாவனை தூண்டுவோர் மற்றும் போதை இலகுவாகக் கிடைக்கும் சூழலிலிருந்து விலகி இருத்தல். அத்துடன் போதையிலிருந்து மீள போதையை நினைவூட்டும் அனைத்தையும் தவிர்த்து உறுதியான தீர்மானத்துடன் அதிலிருந்து மீள வேண்டும்.

- சுய முகாமைத்துவம் - போதை தொடர்பான சுய விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். போதை அடிமையால் ஏற்படும் பிரச்சினைகள், விளைவுகள் பற்றிய தெளிவும் இருத்தல் அவசியம். சுயமாக தீர்மானம் எடுக்கவும், தன்நம்பிக்கையுடன் செயற்படவும் பழகுதல். அத்துடன் உளக்கல்வியை பெற்றுக் கொள்வதுடன் சரியாக மீண்டெழும் ஆவலையும், உறுதியான தீர்மானத்தை கடைப்பிடிப்பதன் ஊடாக போதை அடிமையிலிருந்து மீண்டெழமுடியும்.



உலகின் பல நாடுகள் போதை பிரச்சினையைத் தீர்க்க Therapeutic Communities> Mindfulness Therapy> Rehabilitation through arts and sports>Career rebuilding support>Family counselling போன்ற பல நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

இலங்கையும் இவ்வழியில் முன்னேறுகிறது ஆனால் வலுவான சமூக பங்கேற்பு இன்னும் தேவை. "ஒரு இளைஞன் காப்பாற்றப்படுவது ஒரு குடும்பம் காப்பாற்றப்படுவதற்கு சமம்."

போதையை எதிர்ப்பது என்பது போதை வாங்குபவரை அல்ல, போதை விற்கும் அமைப்பையும், போதைக்கு வழிவகுக்கும் வாழ்க்கை வலிகளையும் எதிர்ப்பது. இறுதியாக, இந்த தலைப்பின் உள்ளார்ந்த மையமாக, போதைப் பழக்கத்துடன் போராடும் இளம் நெஞ்சங்கள் "பேதை" அல்ல அவர்கள் துன்பங்களுக்கு மொழி இல்லாதவர்கள். அவர்களுக்கு தண்டனை அல்ல, துணை தேவை. யாரும் ஒருவரை கைவிடாதபோது தான் சமூகம் மனிதத்தன்மையுடன் நிற்கிறது.

"ஒரு நெஞ்சம் காப்பாற்றினால் ஒரு உலகம்
காப்பாற்றப்படுகிறது."
அதை நாம் மறந்துவிடக்கூடாது.




# உலககிண்ண கால்பந்து ~ 2026 வடஅமெரிக்காவில் உலகத் திருவிழா

இலங்கைத் தீவில் துடுப்பாட்டத்தை (கிரிக்கெட்) கொண்டாடும் அளவிற்கு கால் பந்தாட்டம் (Football) பெரிய எழுச்சியை கொண்டிருக்கவில்லை. எனினும் கால் பந்தாட்டத்திற்கும் சொல்லக்கூடிய அளவிற்கு இரசிகர்களும் மூர்க்கமான காற்பந்தாட்ட தொடர்களும் நடைபெறுவதுண்டு. கடந்த பருவ யாழ்ப்பாணம் மாநகர சபையின் இறுதி காலப்பகுதியில் மாநகர முதல்வராக இருந்த விஸ்வலிங்கம் மணிவண்ணன் பிரகாசமான துடுப்பாட்ட நாயகன் போன்றே, ஆரம்பத்தில் மாநகர முதல்வராக இருந்த இம்மானுவேல் ஆர்னோல்ட் கால் பந்தாட்டத்தில் பிரகாசிக்கும் வீரராவார். யாழ்ப்பாணத்தில் IBCஇன் தயாரிப்பில் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் பூவன் மதீசனின் இசையில் உருவாக்கப்படும் ‘போராட்டம்’ எனும் முழு நீள திரைப்படமும் கால் பந்தாட்ட வீரனின் போராட்ட கருவை சொல்வதாகவே கூறப்படுகிறது. ஆக இம்மாத துமி மின்னிதழின் விளையாட்டு பகுதி கட்டுரையும் இரசிகர்களுக்கு வாசிப்புக்கான காரணத்தை கொண்டிருக்கும்.

ஜூன்-ஜூலை என 38 நாட்கள் மில்லியன் கணக்கான இரசிகர்களின் பெருந்திருவிழாவை ஈடு செய்கிறது 2026 பீபா உலக கிண்ண கால் பந்தாட்ட தொடர் (FIFA Football World Cup 2026).




உலகக் கோப்பை: இரண்டு வார்த்தைகள் சுருக்கமானது, அலங்காரமற்றது, ஆடம்பரமற்றது் எந்தவொரு விளையாட்டின் பிரம்மாண்ட நிகழ்வும் இவ்வளவு சுருக்கமாகப் பெயரிடப்பட்டு, முழு உலகத்தையும் ஒரு பரந்த, அன்பான அரவணைப்பில் தழுவுவதில்லை. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பெரிய கொண்டாட்டங்கள் இல்லாவிடினும், உலகளவில் இரசிகர்களை கொண்டது. சமூக வலைத்தள யுகத்தில், இரசிப்பு குறைந்த தமிழ் (தமிழக) சமூக ஊடகங்களிலும் பீபா பீவர் (FIFA Fever) தொற்றியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வாண்டு ஐ.பி.ல் பருவ காலத்தில் துடுப்பாட்ட போட்டிகளுக்கு சமாந்தரமாக ரசிகர்களின் விருப்பை பெற்றது ‘லுங்கி பாய்ஸ்’ குஜிலிமஸ்து காணொளிகள். அவர்கள் தமது பாணியில் பீபா கால் பந்து உலக கிண்ண போட்டிகளையும் தொடர்கிறார்கள். விசேடமாக அம்மா ஒருவர் நகைச்சுவையாய் கால் பந்து ஜேர்சி (Jersey) விற்பனையில் வீரர்களின் பெயர்களை தமிழ்படுத்துவது, சமூக வலைத்தளத்தில் தமிழ் பரப்பிலும் பீபா அலை வீச்சு அதிகரித்துள்ளதையே காட்டுகிறது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கு மட்டுமே இதைவிட அதிக ஈர்ப்பும் முக்கியத்துவமும் உள்ள நிலையில், உலக விளையாட்டுத் தொடர்களின் மகுடமாகத் திகழும் பீபா உலக கிண்ண கால் பந்து போட்டித் தொடர் இந்த கோடையில் வட அமெரிக்காவில் நடைபெறுகிறது. உலகின் தலைசிறந்த வீரர்கள், மிகச்சிறந்த பயிற்சியாளர்கள் மற்றும் நவீன உத்திகள் ஆகியவற்றை வெளிப்படுத்தி, ஒரு மாதத்திற்கும் மேலாக (ஜூன் 11 முதல் ஜூ லை 19 வரை) இது ரசிகர்களை மெய்சிலிர்க்க வைக்கவுள்ளது.

இவ்வாண்டு நடைபெறும் உலக கிண்ண கால் பந்து தொடரே, இதுவரை நடைபெற்றதிலேயே மிகப்பெரிய உலகக் கோப்பைத் தொடராக அமையவுள்ளது. இதில் 48 நாடுகள் பங்கேற்கின்றன மற்றும் 104 போட்டிகள் நடைபெறுகின்றன. முதல் தொடரில் 13 ஆக இருந்த அணிகளின் எண்ணிக்கை இப்போது 48 ஆக அதிகரித்திருந்தாலும், இந்த விளையாட்டின் மிகப்பெரிய கோப்பைக்காக தமது நாடுகளுக்கும் பங்கேற்கும் வாய்ப்பு

கிடைப்பதில்லை என்ற கவலை, தொடரில் பங்குபற்றாத நாடுகளின் இரசிகர்களிடம் தோற்றுவது இயல்பு. ஆனால், உலகெங்கிலும் உள்ள ரசிகர்களுக்குத் தங்களுக்குப் பிடித்த அணிகள் உண்டு. சிலர் ஆட்டத்தின் பாணியின் அடிப்படையிலும், வேறு சிலர் தங்களின் விளையாட்டு நாயகர்களின் அடிப்படையிலும் தங்கள் தேர்வை மேற்கொள்கின்றனர். இவ்வாண்டு நடைபெறும் தொடரிலும் மெஸ்ஸி எதிர் ரொனால்டோ எனும் குரல் அதிகமாகவே காணப்படுகிறது. காரணம் கால் பந்தின் சாதனை நாயகர்கள் இருவருக்கும், இது இறுதி கால்பந்து உலக கிண்ண தொடராக அமையலாம் என்ற எதிர்பார்க்கை காணப்படுகிறது.




2026ஆம் ஆண்டு உலக கிண்ண கால்பந்து, 'அமெரிக்கா,மெக்சிகோ மற்றும் கனடா' ஆகிய மூன்று நாடுகளில் இணைந்து நடத்தப்படும் முதல் உலகக் கோப்பைத் தொடராகவும் இது திகழவுள்ளது. அமெரிக்காவில் 11 மைதானங்கள், மெக்ஸிகோ 03 மைதானங்கள் மற்றும் கனடாவில் 02 மைதானங்களிலும் போட்டிகள் நடைபெறுகின்றன. வெவ்வேறு நேர மண்டலங்களில் நடைபெறுகிறது. இலங்கை, ரசிகர்கள் அனைத்துப் போட்டிகளையும் காண தங்கள் தூக்கத்தைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். தியாகம் செய்து இரசிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

1930ஆம் ஆண்டு உருகுவேயில் நடைபெற்ற முதல் உலகக் கோப்பையில் பங்கேற்ற 13 நாடுகளில், இவ்வாண்டு போட்டியை நடாத்தும் நாடுகளில் ஒன்றான அமெரிக்காவும் பங்கேற்றது. அதில் அது மூன்றாவது இடத்தைப் பிடித்தது. அதுவே இன்றுவரை அதன் மிகச் சிறந்த செயல்திறனாகும். இவ்வாண்டு போட்டியை நடாத்தும் மற்றைய அணியான மெக்சிகோவும் முதலாவது உலக கிண்ண தொடரில் பங்குபற்றியது. அந்த லத்தீன் அமெரிக்க அணியின் சிறந்த முயற்சி, 1970 மற்றும் 1986இல் சொந்த மண்ணில் காலிறுதிக்கு முன்னேறியதே ஆகும். இவ்வாண்டு தொடரை நடாத்தும் மூன்றாவது அணியான கனடா இதற்கு முன்பு இந்த முக்கியப் போட்டிகளில் இரண்டு முறை மட்டுமே விளையாடியுள்ளது. மேலும் குழுச் சுற்றைத் தாண்டியதில்லை.

2026 ஆம் ஆண்டு போட்டியானது, புவியியல் பரவலைப் பொறுத்தவரை மிகவும் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஏனெனில், ஏறக்குறைய ஒவ்வொரு நான்கு குஜகுயு உறுப்பு நாடுகளில் ஒன்று தகுதி பெற்றுள்ளது. உதாரணமாக, ஆசியாவிற்கான இடங்களின் எண்ணிக்கை முந்தைய ஐந்திலிருந்து ஒன்பதாக உயர்ந்திருப்பது, ஜோர்டான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் தங்களது முதல் போட்டியில் பங்கேற்க வழிவகுத்துள்ளது.

மேலும், இவ்வாண்டு தொடர் அரசியல் நெருக்கடிகளையும் சர்ச்சைகளையும் கூட உள்வாங்கியுள்ளது. விளையாட்டு ஒற்றுமையை வளர்க்கக்கூடும், ஆனால் அது ஏற்கனவே இருக்கும் உலகளாவிய பிளவுகளை மேலும் சிதைக்கவும் கூடும். இஸ்ரேலும் அமெரிக்காவும் தொடங்கிய ஒரு போரில் இரு நாடுகளும் ஈடுபட்டுள்ள நிலையிலும், ஈரான் அமெரிக்காவில் விளையாட உள்ளது. இந்த இருண்ட காலங்களில், ஒரு கவனச்சிதறலாக மட்டுமே இருந்தாலும், கால்பந்து ஒரு வரப்பிரசாதம்.

பிரேசிலின் மாபெரும் வீரரான பீலே அடிக்கடி வர்ணித்ததைப் போல, “அழகான விளையாட்டு“ என அழைக்கப்படும் இது, புவியியல், தேசியம், தலைமுறைகள் ஆகியவற்றைத் தாண்டிய ஓர் ஈர்ப்பைக் கொண்டுள்ளது. கிளப் சார்புகளைப் பின்பற்றும் தீவிர ரசிகர் பட்டாளம், உலகக் கோப்பை நடைபெறும் காலத்தில் விசுவாசங்கள் மாறும் போது புதிய வெளிப்பாட்டைக் காண்கிறது.

